©
தமிழ்நாடு அரசு
2009

[Regd. No. TN/CCN/467/2009-11.
[விலை: ரூ. 4.00 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 43] சென்னை, புதன்கிழமை, நவம்பர் 4, 2009
ஐப்பசி 18, திருவள்ளுவர் ஆண்டு–2040

## பகுதி IV— பிரிவு 2 இன் இணைப்பு

---

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2009–ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 12–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது:—**

**சட்ட எண் 31/2009**

***1959–ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.***

இந்தியக் குடியரசின் அறுபதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

1. (1) இந்தச் சட்டம், 2009–ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, மாநில அரசு அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 22/1959.

34–B–எனும் பிரிவிற்கான திருத்தம்.

2. (இதன்பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1959–ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டத்தின் 34–B–எனும் பிரிவில், (1)–ஆம் உட்பிரிவில் “குத்தகைத் தொகையைச் செலுத்தாததன் பேரில்” என்னும் சொற்றொடருக்கு பின்னர் “அல்லது குத்தகை உடன்பாட்டில் விதிக்கப்பட்ட வரையறைகள் எவற்றையேனும் மீறுவதன் பேரில்” என்னும் சொற்றொடரானது புகுத்தப்படுதல் வேண்டும்.

114–A–எனும் பிரிவிற்கான திருத்தம்.

3. முதன்மைச் சட்டத்தின் 114–A–எனும் பிரிவில் (1)–ஆம் உட்பிரிவில், “47–ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவின் (a) எனும் கூறின் (iii)–ஆம் இனத்தின்படி அல்லது (a) எனும் கூறுக்கான இரண்டாம் வரம்புரையின்படி அல்லது 49–ஆம் பிரிவின் (1)–ஆம்

உட்பிரிவிற்கான இரண்டாம் வரம்புரையின்படி'' என்னும் சொற்றொடருக்குப் பதிலாக ''இந்தச் சட்டத்தின்படி'' என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. தீனதயாளன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப்பிரிவு, சட்டத் துறை.*

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2009—ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 12—ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது ; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது :—**

**சட்ட எண் 32/2009**

***தமிழ்நாடு மாநிலத்திலுள்ள நகராட்சிப் பகுதிகளில் சொத்துரிமை மாற்றங்களின் மீதான தீர்வையை விதித்தல் மற்றும் வசூலித்தல் குறித்து வகை செய்வதற்கானதொரு சட்டம்.***

இந்தியக் குடியரசின் அறுபதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

**1.** (1) இந்தச் சட்டம், 2009—ஆம் ஆண்டு தமிழ்நாடு (நகராட்சிப் பகுதிகளில்) சொத்துரிமை மாற்றங்களின் மீதான தீர்வைச் சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

(2) இது, மாநில அரசு, அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**2.** இந்தச் சட்டத்தில் தறுவாய் வேறு பொருள் குறித்தாலன்றி:— பொருள் வரையறைகள்.

(1) ‘‘அரசு’’ என்றால் மாநில அரசு எனப் பொருள்படும்;

(2) ‘‘நகராட்சிப் பகுதி’’ என்றால் நகராட்சியொன்றின் ஆட்சிப் பகுதி எனப் பொருள்படும்;

(3) ‘‘நகராட்சி’’ என்றால்—

(a) சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, சேலம், திருப்பூர், ஈரோடு, வேலூர், தூத்துக்குடி அல்லது அப்போதைக்கு நடைமுறையிலுள்ள சட்டம் எதனின் கீழும் அமைத்துருவாக்கப்படும் மாநகராட்சி எதுவும்; அல்லது

தமிழ்நாடு சட்டம் V/1920. (b) 1920—ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்கீழ் அமைத்துருவாக்கப்பட்ட ‘‘நகராட்சி மன்றமொன்று’’,

எனப் பொருள்படும்.

**3.** ஒவ்வொரு நகராட்சிப் பகுதியிலும் சொத்துரிமை மாற்றங்களின் மீது,— சொத்துரிமை மாற்றங்களின் மீது தீர்வை விதித்தல்.

(a) நகராட்சிப் பகுதியின் எல்லைகளுக்குள் அமைந்துள்ள அசையாச் சொத்து தொடர்பாக கீழே விவரிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு ஆவணத்தின் மீதும் தமிழ்நாடு மாநிலத்தில் அப்போதைக்கு நடைமுறையிலுள்ளவாறான (இதன் பின்பு முத்திரைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1899—ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டத்தின் கீழ் விதிக்கப்படுகின்றவாறான தீர்வை மீது மேல்வரி என்பதான வடிவத்தில்; மற்றும் மையச் சட்டம் II/1899.

(b) அத்தகைய ஆவணம் ஒவ்வொன்றிற்கும் எதிராகக் கீழே குறித்துரைக்கப்பட்டுள்ளவாறான தொகையின் மீது, அரசால், நூற்றுக்கு ஐந்து விழுக்காட்டிற்கு மேற்படாத வகையில், நிர்ணயிக்கப்படக்கூடிய அத்தகைய வீதத்தில்,

தீர்வை விதிக்கப்படுதல் வேண்டும்:—

| ***ஆவணத்தின் விவரிப்பு.*** | ***தீர்வை விதிக்கப்பட வேண்டிய தொகை.*** |
|---|---|
| *(1)* | *(2)* |
| (i) அசையாச் சொத்து விற்பனை | ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தின் நிலவர மதிப்பு; மற்றும் நிலவர மதிப்பானது முத்திரைச் சட்டத்தின் 47–A எனும் பிரிவின்படி அதிகார அமைப்பு எதனாலும் இறுதியாக தீர்மானிக்கப்படுகின்றவிடத்து அத்தகைய அதிகார அமைப்பினால் தீர்மானிக்கப்பட்டவாறான நிலவர மதிப்பு. |
| (ii) அசையாச் சொத்துப் பரிமாற்றம் | ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தின் நிலவர மதிப்பின் அதிகப்படியான மதிப்பு; மற்றும் நிலவர மதிப்பானது முத்திரைச் சட்டத்தின் 47–A எனும் பிரிவின்படி அதிகார அமைப்பு எதனாலும் இறுதியாக தீர்மானிக்கப்படுகின்றவிடத்து அத்தகைய அதிகார அமைப்பினால் தீர்மானிக்கப்பட்டவாறான நிலவர மதிப்பு. |
| (iii) அசையாச் சொத்து கொடை | ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தின் நிலவர மதிப்பு; மற்றும் நிலவர மதிப்பானது முத்திரைச் சட்டத்தின் 47–A எனும் பிரிவின்படி அதிகார அமைப்பு எதனாலும் இறுதியாக தீர்மானிக்கப்படுகின்றவிடத்து அத்தகைய அதிகார அமைப்பினால் தீர்மானிக்கப்பட்டவாறான நிலவர மதிப்பு. |
| (iv) அசையாச் சொத்தின் உடைமை உரிமையுடன் அடைமானம். | ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள, அடைமானத்தின்மூலம் பெறப்படும் தொகை. |
| (v) அசையாச் சொத்தின் நிலைக் குத்தகை. | ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள, முதல் ஐம்பது ஆண்டுகளுக்கான குத்தகை தொடர்பாக செலுத்தப்பட வேண்டிய அல்லது வழங்கப்படவேண்டிய மொத்த தொகையின் அல்லது வாடகையின் மதிப்பின் ஆறில் ஒரு பங்கிற்குச் சமமானதொரு தொகை. |

முத்திரைச் சட்டத்தின் ஒரு சில வகை முறைகளின் பொருந்துகை.

**4.** (a) முத்திரைச் சட்டத்தின் 27–ஆம் பிரிவானது, நகராட்சிப் பகுதி ஒன்றின் எல்லைகளுக்குள்ளாகவும் அத்தகைய எல்லைகளுக்கு வெளியேயும் அமைந்துள்ள சொத்தினைப் பொறுத்த அளவில், அத்தகைய சொத்துக்கள் குறித்து தனியாக விவரங்கள் திட்டவட்டமாக விவரிக்கப்படுதல் வேண்டுமெனப் பொருள்படுவதாகப் படிக்கப்படுதல் வேண்டும்;

(b) முத்திரைச் சட்டத்தின் 64–ஆம் பிரிவானது தொடர்புடைய நகராட்சியையும், அரசினையும் குறிப்பதெனப் பொருள்படுவதாக படிக்கப்படுதல் வேண்டும்.

**5.** நகராட்சிப் பகுதியொன்றுக்குள்ளாக அமைந்துள்ள சொத்து எதனையும் பொறுத்த அளவில் இந்தச் சட்டத்தின்கீழ் வசூலிக்கப்படும் சொத்துரிமை மாற்றங்களின் மீதான தீர்வையின் நூற்றுக்கு ஐம்பது விழுக்காடு என்ற அளவிலான தொகையானது, அத்தகைய சொத்து அமைந்துள்ள ஆட்சிப் பகுதியில் உள்ள நகராட்சியின் நிதியில் வரவு வைக்கப்படுதல் வேண்டும்; மற்றும் மீதமுள்ள நூற்றுக்கு ஐம்பது விழுக்காடு என்ற அளவிலான தொகையானது, வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய முறையில் (இதன் பின்பு நிதி எனக் குறிப்பிடப்படுவதான) தமிழ்நாடு நகர்ப்புறச் சாலை கட்டமைப்பு நிதியில் வரவு வைக்கப்படுதல் வேண்டும்:

சொத்துரிமை மாற்றங்களின் மீதான தீர்வையினை பிரித்தளித்தல்.

**வரம்புரை:**

ஆனால், பேரூராட்சிப் பகுதியொன்றில் அமைந்துள்ள சொத்து எதனையும் பொறுத்த அளவில், இந்தச் சட்டத்தின்கீழ் வசூலிக்கப்படும் சொத்துரிமை மாற்றங்களின் மீதான தீர்வை அத்தகைய சொத்து அமைந்துள்ள ஆட்சிப் பகுதியில் உள்ள பேரூராட்சியின் நிதியில் வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

**6.** இந்தச் சட்டத்தின் வகைமுறைகளைச் செயற்படுத்துவதில் இடர்பாடு ஏதேனும் எழுமானால் அரசானது, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் ஆணையின் வாயிலாக, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு ஒவ்வாதனவாயிராத வகையில் அந்த இடர்ப்பாடுகளை நீக்குவதற்குத் தேவையானதாகவோ அல்லது உகந்ததாகவோ அதற்குத் தோன்றக்கூடிய அத்தகைய வகைமுறைகளைச் செய்யலாம்:

இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.

**வரம்புரை:**

ஆனால், அத்தகைய ஆணை எதுவும் இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து இரண்டாண்டுக்கால அளவு முடிவுற்றதற்குப் பின்னர் செய்யப்படுதல்கூடாது.

**7.** அரசானது, நகராட்சிகளுக்கோ அல்லது பிற அதிகார அமைப்புகள் எவற்றுக்குமோ, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளைச் செயற்படுத்துவதற்காக, அது தக்கதெனக் கருதுகிறவாறான அத்தகைய பணிப்பாணைகளை அவ்வப்போது வழங்கலாம்; மற்றும் அத்தகைய பணிப்பாணைகளுக்கு இணங்கி நடப்பது நகராட்சிகளுக்கு அல்லது பிற அதிகார அமைப்புகளுக்குக் கடமையாக இருத்தல் வேண்டும்.

பணிப் பாணைகளை வழங்கு வதற்கான அதிகாரம்.

**8.** **(1)** அரசானது, இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக விதிகளைச் செய்யலாம்.

விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.

**(2)** குறிப்பாகவும், மேற்சொன்ன அதிகாரத்தின் பொதுப்பாங்கிற்கு ஊறின்றி அத்தகைய விதிகள்,—

(a) சொத்துரிமை மாற்றத்தின் மீதான தீர்வையை வசூலிப்பதை முறைப்படுத்துவதற்கு வகை செய்யலாம்;

(b) சொத்துரிமை மாற்றத்தின் மீதான தீர்வையை வசூலிப்பதில் அரசுக்கு ஏற்பட்ட செலவினத்தை கழித்துக்கொள்வதற்கு வகை செய்யலாம்;

(c) நிதியை நகராட்சிகளுக்கிடையே பகிர்ந்தளிப்பதற்கு வகை செய்யலாம்;

(d) வகுத்துரைக்கப்பட வேண்டிய அல்லது வகுத்துரைக்கப்படக்கூடிய பிற பொருட்பாடு எதற்கும் வகை செய்யலாம்.

**(3)** இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதிகள் அனைத்தும் ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படுதல் வேண்டும்; மற்றும் அவை குறிப்பிட்டதொரு நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டுமென வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்டிருந்தாலன்றி, அவை அவ்வாறு வெளியிடப்பட்ட நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**(4)** இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதி அல்லது பிறப்பிக்கப்பட்ட ஆணை அல்லது அறிவிக்கை ஒவ்வொன்றும், அது அவ்வாறு செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்னர், கூடிய விரைவில் சட்டமன்றப் பேரவையில் வைக்கப்படுதல் வேண்டும், மற்றும் அது அவ்வாறு வைக்கப்பட்ட கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்னரோ அல்லது அதனையடுத்த கூட்டத்தொடரிலோ அத்தகைய விதி அல்லது ஆணை அல்லது

அறிவிக்கை எதிலும் மாறுதல் எதனையும் சட்டமன்றப் பேரவையானது செய்யுமாயின் அல்லது அத்தகைய விதி அல்லது ஆணை அல்லது அறிவிக்கை எதுவும் செய்யப்படுதலோ அல்லது பிறப்பிக்கப்படுதலோ கூடாது என சட்டமன்றப் பேரவை முடிவு செய்யுமாயின், அந்த விதியானது அல்லது ஆணையானது அல்லது அறிவிக்கையானது அதன் பின்னர் அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட வடிவத்திலேயே நடைமுறைக்கு வருதல் வேண்டும், அல்லது நேர்விற்கேற்ப, நடைமுறைக்கு வராது போதல் வேண்டும்; எனினும் அவ்வாறு மாறுதல் செய்வது அல்லது நடைமுறைக்கு வராமற்போனது எதுவும், அந்த விதியின் அல்லது ஆணையின் அல்லது அறிவிக்கையின்கீழ் முன்னதாகச் செய்யப்பட்டுள்ள செயல் ஏதொன்றின் செல்லுந்தன்மைக்கும் குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.

ஒரு சில சட்ட வகைமுறைகள் நீக்கம் செய்யப்படுதல்.

**9.** இந்தச் சட்டம் தொடங்கிய தேதியன்றும் அது முதற்கொண்டும், இந்தச் சட்டத்தின் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சட்டங்களின் தொடர்பான வகைமுறைகள் நீக்கம் செய்யப்பட்டதாதல் வேண்டும்.

## அட்டவணை

**(9–ஆம் பிரிவைக் காணவும்)**

### பகுதி I

### 1919–ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டம்

135, 136, 137 ஆகிய பிரிவுகள் நீக்கம் செய்யப்படுதல்.

1919–ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் 135, 136, 137 ஆகிய பிரிவுகள் இதன் மூலம் நீக்கம் செய்யப்படுகின்றன. தமிழ்நாடு சட்டம் IV/1919.

### பகுதி II

### 1971–ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டம்

164, 165, 166 ஆகிய பிரிவுகள் நீக்கம் செய்யப்படுதல்.

1971–ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் 164, 165, 166 ஆகிய பிரிவுகள் இதன் மூலம் நீக்கம் செய்யப்படுகின்றன. தமிழ்நாடு சட்டம் 15/1971.

### பகுதி III

### 1981–ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டம்

164, 165, 166 ஆகிய பிரிவுகள் நீக்கம் செய்யப்படுதல்.

1981–ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் 164, 165, 166 ஆகிய பிரிவுகள் இதன் மூலம் நீக்கம் செய்யப்படுகின்றன. தமிழ்நாடு சட்டம் 25/1981.

### பகுதி IV

### 1920–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம்

116-A, 116-B, 116-C ஆகிய பிரிவுகள் நீக்கம் செய்யப்படுதல்.

1920–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் 116–A, 116–B, 116-C ஆகிய பிரிவுகள் இதன் மூலம் நீக்கம் செய்யப்படுகின்றன. தமிழ்நாடு சட்டம் V/1920.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. தீனதயாளன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப்பிரிவு, சட்டத் துறை.*

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2009—ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 12—ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது :—**

**சட்ட எண் 33/2009**

***1974—ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்புச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.***

இந்தியக் குடியரசின் அறுபதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

**1.** (1) இந்தச் சட்டம், 2009—ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பும் தொடக்கமும்.

(2) இது, மாநில அரசு அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக் கூடிய அத்தகைய தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 13/1974

**2.** (இதன் பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1974—ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்புச் சட்டத்தின் 2—ஆம் பிரிவில் (1—A) எனும் கூறுக்குப் பதிலாக, பின்வரும் கூறுகள் அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:— 2—ஆம் பிரிவிற்கான திருத்தம்.

"(1—A) 'தரைப்பரப்பு' என்றால் (நீளத்தையும் அகலத்தையும் பெருக்கி வருகிற அளவு என்ற நிலையில்) ஊர்தியின் கட்டமைப்பிற்குள்ளாக அமைந்த மொத்தத் தரைப்பரப்பில் நூற்றுக்குப் பத்து விழுக்காடு என்ற அளவிலான நிலையான கழிவினைச் செய்ததற்கு பின்னர் எட்டப்படும் மொத்தத் தரைப்பரப்பு எனப் பொருள்படும்.

**வரம்புரை:**ஆனால், நிலையான கழிவிற்குப் பின்னர் எட்டப்படும் நிகர தரைப்பரப்பின் முதல் தசம பின்னப் புள்ளிக்கு அப்பால் வரும் சதுர மீட்டர் ஒன்றின் பின்னமானது, அதற்கு அடுத்த உயரளவு தசமப் புள்ளிக்கு முழுமையாக்கப்படுதல் வேண்டும்.

(1—B) 'அரசு' என்றால் மாநில அரசு எனப் பொருள்படும்;".

**3.** முதன்மைச் சட்டத்தின் முதலாம் இணைப்புப்பட்டியலில், 2—ஆம் வகையில் II-ஆம் பத்திக்குப் பதிலாக, பின்வரும் பத்தியானது அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:— முதலாம் இணைப்புப் பட்டியலுக்கான திருத்தம்.

"II 'சுற்றுலா ஊர்தியாக' வகை செய்யப்பட்டிருந்தாலும் அல்லது அவ்வாறு வகை செய்யப்பட்டிராவிட்டாலும், ஒப்பந்த ஊர்தியாக மட்டுமே ஓட்டுவதற்கு அனுமதிக்கப்பட்ட ஊர்திகள்,

(a) (ஓட்டுநர் அல்லாத பிற) முப்பத்தைந்து நபர்களுக்கு மேற்படாமல் ஏற்றிச் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிற ஊர்தியாக இருக்கிற நிலையில், அவ்வூர்தியின் தரைப்பரப்பின் ஒவ்வொரு சதுர மீட்டருக்கும்; ரூ. 4,900.00

(b) (ஓட்டுநர் அல்லாத பிற) முப்பத்தைந்து நபர்களுக்கு மேற்பட்டவர்களை ஏற்றிச் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிற ஊர்தியாக இருக்கிற நிலையில் (ஓட்டுநர் அல்லாத பிற), நபர் ஒவ்வொருவருக்கும். ரூ. 3,000.00

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. தீனதயாளன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப்பிரிவு, சட்டத் துறை.*

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2009—ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 12—ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது :—**

**சட்ட எண் 34/2009**

**1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்புச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இந்தியக் குடியரசின் அறுபதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

**1.** (1) இந்தச் சட்டம், 2009—ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (இரண்டாம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பும் தொடக்கமும்.

(2) இது, அரசு அறிவிக்கையின் வாயிலாகக் குறித்துரைக்கக்கூடிய அத்தகைய தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 13/1974. **2.** 1974—ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்புச் சட்டத்தின் 20-B எனும் பிரிவில் பின்வரும் வரம்புரையானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:— 20-B எனும் பிரிவிற்கான திருத்தம்.

**வரம்புரை:** ஆனால், 15-A எனும் பிரிவின்படியான உரிமம் வழங்கும் அலுவலரின் பணிப்புரைக்கு எதிராக மேல் முறையீடு எதுவும் உரிமம் வழங்கும் அலுவலரால் செலுத்தப்படவேண்டுமென, அவ்வாறு பணிக்கப்பட்டவாறான வரியின் நூற்றுக்கு ஐம்பது விழுக்காடு அளவிற்குச் செலுத்தியதற்கான நிறைவான சான்றினை உடன் அனுப்பினாலன்றி ஏற்கப்படுதல் ஆகாது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. தீனதயாளன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப்பிரிவு, சட்டத் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

IV-2 Sup.(T) (43)—2